# ***DEPOSITION OF WITNESS***
# IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| **MCOP No. 204/2024** | **நாள் – 30.01.2026** | **சாட்சி – ம.சா.1** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.பிரகாஷ் என்கிற பிரகாஷ் ராஜ் | தந்தை பெயர் | திரு.கிருஷ்ணமூர்த்தி |
| ஊர் | கீழையூர் | தாலுக்கா | கீழ்வேளூர் |
| தொழில் | இல்லை | வயது | 25 |

**முதல் விசாரணை:**

நான் அசல் மனுவில் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆக சாட்சியம் அளிக்கிறேன். மனுவில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். முதல் நிலை சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது.

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | 18.03.2021 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை பதிவிறக்க நகல். |
| ம.சா.ஆ.2 | 17.03.2021 தேதியிட்ட நாகப்பட்டினம் மருத்துவக்கலூரி மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேடு பதிவிறக்க நகல். |
| ம.சா.ஆ.3 | நாகப்பட்டினம் மருத்துவக்கல்லூரி அரசு மருத்துவமனை வழங்கிய மெடிக்கோ லீகல் ஒப்பினியன் பதிவிறக்க நகல். |
| ம.சா.ஆ.4 | 19.03.2021 தேதியிட்ட எதிர்மனுதாரர் பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை பதிவிறக்க நகல். |
| ம.சா.ஆ.5 | 26.04.2021 தேதியிட்ட TN 51 AK 3119 Bajaj Pulsar இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை பதிவிறக்க நகல். |
| ம.சா.ஆ.6 | 26.03.2021 தேதியிட்ட திருவாரூர் மருத்துவக்கல்லூரி |

| | |
|---|---|
| | மருத்துவமனை வழங்கிய விடுவிப்பு சான்று அசல். |
| ம.சா.ஆ.7 | மனுதாரரின் ஆதார் அட்டை நகல் (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது). |
| ம.சா.ஆ.8 | மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் முதல் பக்க நகல் (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது). |

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

நான் விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த தேதி என்னவென்றால் ஞாபகம் இல்லை. விபத்து சமயத்தில் நான் சென்ற இருசக்கர வாகனம் யாருக்கு சொந்தமானது என்றால் வாகனத்தை ஓட்டிச் சென்ற வெங்கடேசனுக்கு சொந்தமானதாகும், நான் பின் இருக்கையில் அமர்ந்திருந்தேன். விபத்து எங்கு நடந்தது என்றால் மேலப்பிடாகை, சேவூராயர் கோயில் அருகில் விபத்து நடந்தது. விபத்து நடந்த போது மணி என்ன இருக்கும் என்றால் இரவு நேரத்தில் விபத்து நடந்தது, நேரம் ஞாபகம் இல்லை. அரசு பேருந்து எந்த திசையை நோக்கி வந்தது என்றால் திருத்துறைப்பூண்டியில் இருந்து நாகப்பட்டினம் நோக்கி வந்தது. நான் எங்கிருந்து எங்கு வந்தேன் என்றால் திருத்துறைப்பூண்டியில் இருந்து கீழையூர் நோக்கி வந்தேன். விபத்து சமயத்தில் வாகனத்தை ஓட்டியவரும், நானும் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். 17.03.2021 ம் தேதியன்று அரசு பேருந்து ஓட்டுனர் TN 72 N 1541 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தை இரவு சுமார் 07.40 மணியளவில் திருத்துறைப்பூண்டி பேருந்து நிலையத்தில் இருந்து நடையெடுத்து சீரான வேகத்துடனும், கவனத்துடனும், நிதானமாகவும், சாலை விதிகளை அனுசரித்து நாகப்பட்டினம் நோக்கி சென்றுக்கொண்டிருந்த போது, விபத்து

நடந்ததாக கூறப்படும் மேலப்பிடாகை கிராமத்தில், சேவூராயர் கோவில் அருகே TN 51 AK 3119 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் வெங்டேசன் என்பவர் வண்டியை ஓட்ட, பின் இருக்கையில் நான் அமர்ந்துக்கொண்டு சாலையின் இடதுபுறத்தில் இருந்து வலதுபுறம் எவ்வித சைகையும் செய்யாமல், சாலையின் மையப்பகுதிக்கு வந்து அரசு பேருந்தின் மீது மோதி தனக்கு தானே விபத்தை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. நாங்கள் இருவரும் விபத்து சமயத்தில் மது அருந்தியிருந்தோம் என்றால் சரியல்ல. திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வழங்கிய விபத்து பதிவேட்டில் நான் மதுவின் ஆதிக்கத்தில் இருந்ததாக குறிப்பிட்டிருந்ததால் நான் அதனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பயணம் செய்த இருசக்கர வாகனத்திற்கு வழங்கப்பட்ட ம.சா.ஆ.5 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் வாகனத்திற்கு காப்பீடு பாலிசி இல்லை என்றும், ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்றும், குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்து நடந்தவுடன் எந்த மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன், பிறகு திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 17.03.2021 முதல் 26.03.2021 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். நான் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேனா என்றால் சிகிச்சை பெற்றேன். அவ்வாறு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான எவ்வித ஆதாரங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது போன்று சிகிச்சை பெற்றதற்கான மருந்துகளின் விலைபட்டியல் மற்றும் ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை

என்றால் சரிதான். நான் என்ன வேலை பார்கிறேன் என்றால் விபத்திற்கு முன்பு கொத்தனார் வேலை பார்த்தேன். எனது வேலை, வருமானத்தை குறித்த ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு வயது எவ்வளவு என்றால் 27 ஆகும். விபத்து சமயத்தில் எனக்கு ஏற்பட்ட உபாதைகள் எல்லாம் சரியாகிவிட்டது என்றாலும், வயது சிறு வயது என்பதால் உபாதைகள் இருந்தால் சரியாகிவிடும் என்றால் சரியல்ல. நான் சென்ற வாகனத்தின் காப்பீடு நிறுவனத்தை தரப்பினராக சேர்க்கவில்லை என்றாலும், அவ்வாறு சேர்க்காததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் அரசு நிறுவனம் என்பதால் கூடுதல் இழப்பீடு பெற வேண்டும் என்பதால் பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு நான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தில் நானும், வெங்கடேசனும் மது அருந்தி சென்று பேசிக்கொண்டே சென்று விபத்தை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. அரசு பேருந்தின் ஓட்டுனர் சாலை விதிகளை அனுசரித்து கவனமாக வந்துக்கொண்டிருந்தார் என்றாலும், அதனால் எதிர்மனுதாரர் எனக்கு எவ்வித இழப்பீடு தொகையும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் கோரிய இழப்பீடு மிக அதிகம் என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness.*
*Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.01.30 18:11:18 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*